**செ. கு. எண்: 050** **நாள் : 15.02.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.2.2016

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், ஓராட்டுக்குப்பை கிராமத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்தில் 11.2.2016 அன்று ஏற்பட்ட தீ விபத்தில், அப்போது பணியிலிருந்த மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த திருவாளர்கள் குணால், தருண், பிரித்தம், பிக்காஷ், பிரிஜுன் மற்றும் சரோஜ் ஆகிய தொழிலாளர்கள் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி குணால், தருண், பிரித்தம், பிக்காஷ், பிரிஜுன் ஆகியோர் 12.2.2016 அன்றும், சரோஜ் 13.2.2016 அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**